**DECEMBER 2022** **U/ID 33205/URT1A/ URL1A**

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

கீழ்காணும் வினாக்களுக்கு பத்திற்கு மட்டும் 30 சொற்களில் விடை தருக.

1. சோழர்காலச் செப்பேடுகளில் மிகப்பெரிய செப்பேடு எது?

2. ஆரிய சமயத்தில் இடம்பெற்றவை எவை?

3. முசிறியை ரோமர்கள் எவ்வாறு அழைத்தனர்?

4. இலங்கையின் வரலாற்றைக் கூறும் நூல் எது?

5. தொல்காப்பியத்திற்குச் சிறப்புப் பாயிரம் எழுதியவர் யார்?

6. 'வாதாபி கொண்டான்' என்று அழைக்கப்பட்ட மன்னன் யார்?

7. பராந்தகனின் ஆட்சி எத்தனை ஆண்டுகாலம் நீடித்தது?

8. குடவோலை முறை யாருடைய காலத்தில் தோன்றியது?

9. தணிகைப் புராணத்தின் ஆசிரியர் யார்?

10. இந்தியாவில் அடியெடுத்து வைத்த முதல் ஐரோப்பியர்கள் யார்?

11. இரட்டையாட்சி அரசியலை வடிவமைத்தவர் யார்?

12. சென்னையில் முதல் அச்சுக்கூடம் தொடங்கப்பட்ட ஆண்டு எது?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு 200 சொற்களில் விடையளிக்க.

13. தமிழகத்தில் சமுதாயப் பின்னணியை அறிய உதவிய இலக்கியங்களைக் குறிப்பிடுக.

14. ஆதிச்சநல்லூர் ஆராய்ச்சியில் கிடைத்துள்ள புதைபொருள்கள் பற்றி விவரிக்க.

15. தமிழகத்துக்கும் பாபிலோனியாவுக்குமிடையே நடைபெற்ற வாணிகத்தினை விவரி.

16. பதிற்றுப்பத்து - சிறுகுறிப்பு தருக.

17. முதலாம் குலோத்துங்கனின் மெய்க்கீர்த்திகள் நான்கினைக் குறிப்பிடுக.

18. பல்லவர் காலத்துச் சிற்றரசர்கள் பற்றிக் குறிப்பு வரைக.

19. போர்ச்சுக்கீசியர் - குறிப்பு வரைக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு 500 சொற்களில் விடையளிக்க.

20. பத்துப்பாட்டில் அகநூல்களைப் பற்றி விரிவாகக் கட்டுரை வடிவில் தருக.

21. சிந்துவெளி மக்களின் கலை மற்றும் வாணிபத்தைக் கட்டுரை வடிவில் தருக.

22. சங்க இலக்கியத்தில் கூறப்பட்டுள்ள விளையாட்டுகளைப் பற்றிச் சிறுகுறிப்பு வரைக.

23. இரண்டாம் குலோத்துங்கனின் சமயப்பணிகளை விவரிக்க.

24. இந்திய விடுதலைப் போரில் பாளையக்காரர்களின் பங்கினை விவரிக்க.

———————